இதழ் - 01

நவம்பர் - ஜனவரி
2001 - 2002

ரமழான் ஸ்பெஷல்

# கீ
# ற
# ல்



மின்னல் வெளியீட்டகம்
நெசவு நிலைய வீதி
ஒலுவில் - 02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமான விலையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட:
நோன்புப் பெருநாள் ஆடையணித்தேர்வினை வழங்க தயாராகிறார்கள்

# றஸ்கவி மல்டி கோணர்

நெசவு நிலைய வீதி,
ஒலுவில் – 02.
உரிமையாளர் : எஸ். எல். அப்துல் அஸீஸ்

நியாயமான விலையில், சில்லறை, மொத்த வியாபாரப் பொருட்களுக்கு
ஞாபகமிருகட்டும்

# ஸறாபத் அல்அக்கீல் ரேட் சென்றர் & றைஸ் மில்

ஹாசீம் வீதி, 4ம் சந்தி, ஒலுவில் - 02.
உரிமையாளர் : எஸ். எம். நஸீறுதீன்

பட்டுமண் கலக்காத, சுத்தமான பள்ளக்காட்டு களியில் உற்பத்தியாகும்
உறுதியான செங்கற்களை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள

# ஆர். றிஸ்வான் (றைவர்)

திராய்க்கேணி வீதி, ஒலுவில் – 02.


# இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்

- அப்துல் ரஹ்மான் பிறதர்ஸ் - அ.பற்று
- எம். செயினுல் ஆப்தீன் - அ.பற்று
- எம். எஸ். எம். ஜிப்ரி - அ.சேனை
- ஏ. எம். முஸம்மில் - ஒலுவில்
- எம். எச். எம். பைசல் - ஒலுவில்
- ஏ. எல். இஸ்மாயில் - ஒலுவில்
- ஏ. எல். நஸ்றுல்லாஹ் - ஒலுவில்
- எம். ஐ. எம். ஹனீபா - ஒலுவில்
- ஐ. எல். லத்தீப் ஹாஜி - ஒலுவில்
- எஸ். எல். ஜிப்ரி - ஒலுவில்
- எஸ். எம். உபைதீன் - ஒலுவில்
- எஸ். ஏ. ஸக்கூர் - ஒலுவில்
- கே. எல். ஹஸீனா - ஒலுவில்
- எம். எல். முஜீப் - ஒலுவில்
- ஏ. ஆர். இர்பான் - ஒலுவில்
- ஜே. நௌசாட் - ஒலுவில்
- ஏ. எம். றிஸ்வான் - ஒலுவில்
- ஐ. எல். நூர்டீன் - ஒலுவில்
- கே. எம். றமீஸ் - ஒலுவில்
- எம். ஏ. எம். அஷ்ரப் - ஒலுவில்

**Special Thanks to :**

Mr. Azeez M Fairoos & Mr. I. L. Risvi


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை ஒரு வணக்கமாக்கலாமா?

அருள் செறிந்த நோன்பு மாதத்தினுள் இறைவழியில் ஏதாவது செய்யவேண்டுமென்ற எமது அவாவினால் வெளியாகும் இவ்விதழ் மூலம் உங்களுடன் கருத்துப்பரிமாறக் கிடைத்ததற்காக இறைவனுக்கு நன்றிகள் அனைத்தும். இரண்டு முரண்பட்ட இயல்புகளுடைய ஒரு காலப்பகுதியினுள் இன்று நாமுள்ளோம். அவை;

01. புனித நோன்புக்குரிய வணக்க காலம்.
02. சமாதானத்திற்கு வேட்டு வைத்து அட்டகாசிக்கும் தேர்தல் காலம்.

பாவச் செயல்களையும், உள்ளத்தில் கறை படிய வைக்கும் செயல்களையும் சுட்டுப் பொசுக்குவதே ரமழான் மாதம். அமைதியையும், நெருங்கிய சகோதரப் பிணைப்பையும் வேண்டி நிற்பது இந்த நோன்பின் அடிப்படை இயல்பு. இந்த இயல்புகளுக்குப் புறம்பானவை நடக்கின்ற போது எமக்கு அதன் பெறுமதியை முழுமையாக அடைய முடியாமற் போய்விடலாம். இதற்கு எடுத்துக்காட்டாக ''ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் பெறுமதி மிக்க 'லைத்துல் கத்ர்' இரவின் கால அமைவைப் பற்றி மக்களுக்குச் சொல்வதற்காக விரைந்து வந்த வேளை இருவர் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர். இதன் காரணத்தால் அந்த இரவு பற்றிய அறிவு நபியவர்களிடமிருந்து உயர்த்துப்பட்டு விட்டது". குதர்க்கம், கைகலப்பு போன்றன இறைவனுக்கு பிடிமானமற்றன என்பதனை இது எமக்குக் குறித்துக்காட்டுகிறது.

இது இவ்வாறு இருக்க இந்நாட்டின் தேர்தலோ குதர்க்க வாதங்களையும், கைகலப்புக் களையும் அடிப்படை இயல்பாகக் கொண்டுள்ளது. கருத்து முரண்பாட்டுப் பிளவுகள் இல்லாதது ஒரு தேர்தல் ஆகமாட்டாது என்று கூறுமளவிற்கு இதன் தன்மை இன்றுள்ளது. அல்லாஹுதஆலாவுக்கு மிகவும் வெறுப்பிற்குரிய இடமான கடைத்தெருக்களை நாம் எம் வாயினால் அலங்கரிக்கின்றோம். எமது வருகையினால் கடைத்தெருக்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றன. அங்கே பள்ளி வாயல்களும், குர்ஆன் பிரதிகளும் தனிமையில் விடப்பட்டு குற்றுயிராய்க் கிடக்கின்றன. எமது வாய்களுக்கு பூட்டுக்கள் பூட்டப்பட்டு விசாரணை நடாத்தப்படும் அந்த மறுமை நாளில் இவைகள் எமக்கெதிராக சாட்சி சொல்ல நிச்சயமாக ஒன்று திரளும். அவ்வாறான நிலை ஏற்பட்டால் எமது நிலை என்னவாகும்....? ''எந்த ஒரு சமுதாயத்தவரும் தம் நிலையைத் தாமே மாற்றிக்கொள்ளாத வரையில் அல்லாஹ் அவர்களை நிச்சயமாக மாற்றுவதில்லை.

*(13:11)*

எனவே, இன்று நம்மிடையே புரையோடிக் காணப்படும் இத்தகைய தேர்தல் விவகாரங்களை நாமும் இஸ்லாமிய ஒளியினுள் உட்படுத்துவதன் மூலம் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் அத்தனை பகுதிகளும் தூய நிய்யத்தின் மூலம் வணக்கமாகின்றது. அந்த வகையில் எமது எண்ணங்களையும் தூயதாக்கி எமது வேலைகளையும், செயற்பாடுகளையும் ஓர்வணக்கமாக மாற்றுவோமாக! இந்த சங்கை பொருத்திய ரமழான் காலம் இதற்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

*இஷட். எம். நிஸாம்*
**(ஜாமிய்யா நளீமிய்யா - பேருவளை)**

# அதான் சொல்லக் கேட்டால் உணவு உண்பதை நிறுத்தாதீர்கள்

- நபி (ஸல்) அவர்கள் நோன்பாளியாக இருக்கின்ற போது என்னால் கணக்கிட முடியாத அளவிற்கு அதிகமாக பல் துலக்கி (மிஸ்வாக் செய்ய) நான் கண்டேன்.

அறிவிப்பாளர் : ஆமீர் இப்னு ரபிஆ (ரழி)
ஆதாரம் : புஹாரி, திர்மிதி, அபூதாவூத்

- யார் ரமழானில் நோன்பு நோற்று அதனைத்தொடர்ந்து ஷவ்வாலில் ஆறு நாட்கள் நோன்பு நோற்கின்றாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு நோற்றவர் போலாவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஷெய்யிதுல் குத்ரி (ரழி)
ஆதாரம் : முஸ்லிம்

- ஸஹர் உணவை தாமதப்படுத்துவது மிகச்சிறந்தது. ''ஸஹரை தாமதப்படுத்தி, நோன்பு திறப்பதை விரைவு படுத்தும் வரை மக்கள் நன்மையில் நிடித்துள்ளார்கள்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூதர் (ரழி)

- ஸஹர் உணவு உண்ணும் போது அதான் சொல்லக்கேட்டால், உணவு உண்ணுவதை நிறுத்தக்கூடாது. தனது கையில் உணவுத்தட்டு இரு கையில் உங்களில் எவரும் அதான் கூறுவதைச் செவியுற்றால், தனது தேவைக்கேற்ப அளவு உண்ணாமல் பாத்திரத்தை வைத்து (உண்பதை நிறுத்தி) விட வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)
ஆதாரம் : அபூதாவூத்

*தகவல் உதவி : இப்னு முஸ்லா உமர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயமுள்ள உங்களிடம்.....க

*வாசகர்களுக்கு இனிய ஸலாம்!*

இன்ஷாஅல்லாஹ் 2002 ஜனவரியில் வெளியாகவிருக்கும் எங்களது கீறல் சஞ்சிகைக்கான ஒரு பரீட்சார்த்த முயற்சி இது. கீறலின் வெள்ளோட்ட விழா இது.

பெயர் பெற்ற அளவிற்கு எமது மண் சாதித்த வீதம் குறைவு எனலாம். இலக்கியத்திலும் சரி, அரசியலிலும் சரி ஒரு கொள்கை, ஒரு இலட்சியம் இன்னும எம்மிடையே சரியாக, உறுதியாக இல்லாமலேயே உள்ளோம். பிறந்தோம், வளர்ந்தோம், இறந்தோம் என்று இல்லாமல் எதை யாவது நாம் சாதிக்க வேண்டாமா?

எழுத்து ஒரு சிறந்த ஆயுதம். அது உலகையே தன் கைக்குள் அடக்கும் மகாசக்தி படைத்தது. அந்த ஆயுதத்தை இறைவன் எம் கைகளில் எதற்காகத்தந்தான்? வெறு மனே மாயைகளை எழுதி குப்பையில் குவிக்கவா?

எமது சிந்தனைகளையும், எமது கருத்துக்களையும் உலகளாவிய ரீதியில் சுதந்திரமாக நாம் வெளிப் படுத்த எமக்கென்று ஓர் ஊடகம் புறப் பட வேண்டாமா? அதுதான் 'கீறல்'. எமது சிந்தனையின் நெருப்புக் கரங் களால் இங்கே... இதிலே... கீறுவோம். நாளை இந்த உலகத்தின் மார்பில் இரத்தம் சொட்டட்டும்.

*எங்களோடு இணையுங்கள்.*
*எண்ணங்களைப் பகிருங்கள்!*

*- ஆசிரியர் -*

## அகால அழைப்பு

*'மஸ்ஜித்' ல்*
*தொழுகை 'ஜமாஅத்' தாய் முடிய...*
*இடைநிலை இருப்பிருந்தோர்*
*எழுந்து நிலைவர...*

*அவர்களில்*
*ஒரு மௌலவியைத் 'தொட்டு'*
*இன்னொரு சிறு*
*'ஜமாஅத்' தொழுகை வளர...*
*சுன்னத் தொழவும்*
*பலபேர் எழ...*

*சட்டென எழுந்தார் 'தாச...'*
*சடாரென 'மைக்' கைப்பற்றி*
*படாரென தன்முன் வைத்து*
*திடீர் (என) 'பயான்'...*

*தொழுவோர் செவி ஏறி*
*சிந்தை 'கலக்கும்' பயான்*
*பள்ளியில் இலாதோரின்*
*பயனும் நாடி*
*வெளியேறி*
*வெகு தூரம் செல்கிறது*

*தெளிவாக எழுதப்பட்டு*
*கண்ணாடி 'பிரேம்' இட்டு*
*'மஸ்ஜித்' முன்றில் சுவரில்*
*அறைந்த ஆணியில்*
*தூக்கிலிடப்பட்டுள்ளது*
*இந்த ''ஸஹீஹ் ஹதீஸ்'' -*
*''தொழுகைக்கு*
*இடைஞ்சலாய்*
*குரல் உயர்த்தி*
*குர்ஆன் ஓதவும் கூடாது''.*

— யாஸீன் ஸாலிஹ் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை

ஒலுவில் சொல்லன்பன்
ஏஸ்எம்எம். நஸிறுதீன்

## குறுங்கதை

ஸுஹர்த் தொழுகையை பள்ளிவாசலில் தனியாகத் தொழுததுடன், நோன்பு சம்பந்தமான பயான்களையும், கவனம் கொள்ளாது, வேக நடையில் வீட்டின் குசினிக்குள் நுழைந்து தயாராய் இருந்த சாப்பாட்டை உண்ணத்தொடங்கிய அஹமது முஹம்மதுவுக்கு விக்கல் ஆரம்பித்து விட்டது. பாத்திரங்கள் வற்றிக்கிடந்ததும் ஆத்கரிமாய் அழைத்தார் மனைவி கதிஜாவை.

நோன்புக்களைப்புடன் பாயில் கிடந்த மனைவி, கணவனின் அழைப்பின் அர்த்தம் புரிந்து தண்ணீர்க் குவளையுடன் குசினிக்குள் நுழைந்து தாகத்திற்கு நீர்கொடுக்கும் போது இந்த அறுபது வயதிலும் ஆத்மீகத்தாகம் இல்லாத அவர் அறியாமையை அங்குலம் அங்குலமாய் அளந்து கொண்டாள்.

அவளைத் திருமணம் முடித்து இந்த 25 வருடத்திலும் ஒரு நோன்பு கூட வைத்துத் தெரியாது. புத்திமதி கூறி பல போர்க்களங்களைச் சந்தித்தவள். இன்று கூட ஏதாவது, சொல்லியிருந்தால் நோன்பு என்று கூட பார்க்கமாட்டார் என்பது அவளுக்குத் தெரியும். ஏழு வயதுக்குழந்தை முப்பது நோன்பையும் பிடிக்கும் போது, இந்த 70 கிலோ உடம்பைச் சுமந்து சோர்ந்தாலும் பட்டினிப் பாசறைப் பயிற்சியில் பக்குவம் பெற்றிட முடியவில்லை. யாராவது கேட்டால் வயிற்றில் குழப்பம் வரும், வாய்வு வரும் என்று கேட்பவரை குழப்பிவிடுவார். பகலில் சமைத்தால் பக்கத்து வீடுகளிலும் மணக்கும் என்பதற்காக ஸஹர் வேளை சமையலில் கணவனின் பகல் உணவும் சேர்ந்தே தயாராகும். நோன்பு பிடியாவிட்டாலும் நோன்பாளிகளுக்காக நோன்பு திறக்கும் நேரத்தில் பள்ளியில் கொடுக்கப்படும் கஞ்சி குடிப்பதற்கு பள்ளியில் இடம்பிடிப்பதில் கெட்டிக்காரர். பெருநாள் உடுப்புத் தேர்வுகளில் எத்தனை ஊர்களுக்கும் போய்வருவார்.

தராவிஹ் தொழுகை, குர்ஆன் ஓதுதல், பாவ மன்னிப்புத்தேடுதல் போன்ற விவகாரங்களை ஏறெடுத்தும் பார்க்காமல் மூக்குவளி வெளியேற உண்டு கொண்டு இருக்கும் கணவனை ஊடறுத்துப் பார்த்த மனைவி கதிஜாவை, "என்ன புள்ள அப்படிப் பார்க்கிற, நாளக்கி பெருநாள், உடுப்பு வாங்கல்ல எண்டு கோவமா? மஹரி தொழுதுக்கு வரக்குள்ள ஒனக்கு பொடவ வாங்கி வாறன்" மனைவியின் பார்வையில் சிக்கிக்கிடந்த யதார்த்தம் புரியாத கணவனுக்கு மனதால் துஆ செய்தாள்.

நாளைய பெருநாளுக்காக ஊர் கலகலப்பாக இருந்தது. மஹ்ரிப் தொழுகைக்கு பள்ளி நோக்கி 'பாட்டா' வில் சென்ற கணவர் இரவு ஒன்பது மணிக்கு 'ஆட்டா' வில் வீடு வந்தார் இரண்டு பேர் கைத்தாங்கலாக அழைத்துவர. மனைவி கேள்விக்குறி முகத்தோடு பதறினாள், கணவன் மனதால் பதறினார்.

கடைசி நோன்பு என்று நினைத்தாரோ என்னவோ இரண்டு கோப்பைக் கஞ்சியை மேலதிகமாகக் குடித்ததும் மயங்கி விட்டார். பள்ளியில் இருந்தே அவசரமாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதும் சோதனையிட்ட டாக்டர். இரத்த அழுத்த வியாதி (ப்றசர்) இருப்பதாகக் கூறி குளிசை மருந்து தந்ததுடன் கண்டிப்பாகச் சாப்பாட்டில் கட்டுப்பாடு அவசியமெனக் கூறியதுடன் குறிப்பாக இரவுச் சாப்பாட்டை முற்றதாகத் தவிர்த்து ஒரு கிளாஸ் பால் மட்டும் கொடுக்கச் சொன்னதாக அழைத்து வந்தவர்களில் ஒருவர் சொன்னதும் நோன்பு மனிதனுக்கு மறை முகமாக உணர்த்தும் அதன் பின்னணியை பாதி மயக்கத்திலும், பாதி நினைவிலும் உணரத்தொடங்கினார் அஹமது முஹம்மது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பு

வைத்தியரில்லாமலேயே
நோய்களைத் தீர்க்கும்
நல்ல டொனிக்!

பணக்கார வயிறுக்கு
ஏழையாக ஒரு
சந்தர்ப்பம் !

இறைவனோடும்
ஏழையோடும் பேச
அதிகமான வாய்ப்பு!

இருவேளை மட்டும்
உணவை நினைக்க
ஒரு மாதம் !

நன்மைக் கொள்ளைக்கு
வருடத்தில்
முப்பது நாள் !

— எஸ்எம்பீ. அஜ்மல்கான் —



# வரம் தருவாயா?

மகத்துவங்களால்
மனித மனங்களில்
மகத்தான
மாற்றங்களை
கொண்டு வரும்
ரமழானே ....!

இம்முறையாவது
ஒரு வரம் தருவாயா?
ள் மனங்களிலெல்லாம்
ஒற்றுமை வளர !

☐☐ அன்வர் ☐☐

# முன்னுரிமை

நோன்பு நோற்ற பிள்ளை
வீழ வாங்க கடைக்கனுப்பும்
வாப்பா....!

— எம். நவாஸ்செளரி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ஷெய்க் யூ.கே. அப்துர் றஹீம் அவர்களுடன் ஒரு நேர்காணல்

❖ நோன்பில் நிய்யத்தைப் பற்றி சற்று விளக்குங்களேன்?

பதில்: நோான்பிற்கு நிய்யத் என்பது அவசியமே. அதன் றுகுன்களில்; அதுவுமொன்று. நோன்பிற்கு மாத்திரமன்றி எல்லா இபாதத்துக்களுக்கும் அது அவசியமானது. அது போலவே, நேரடியான இபாதத்துக்களல்லாத எந்த நற்செயலையும் இபாதத்தாக மாற்றுவதற்கும் அது அவசியமானது. இதனையே பின்வரும் ஹதீஸ் வசனம் சுட்டிக்காட்டுகின்றது. ''நிச்சயமாக செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன". (புஹாரி, முஸ்லிம்) எனினும், நிய்யத் வைக்கவேண்டுமென்று சொன்னதும் மக்கள் மத்தியில் பிரபல்யமாகவுள்ள ''நவையத்து ஸவ்மகதீன்...." என்று தொடரும் சில வார்த்தைகளை வாயால் உச்சரித்துத்தான் நிய்யத் வைக்க வேண்டும் என்பது கருத்தல்ல, அது நபி வழியுமல்ல.

நிய்யத் என்பது உள்ளத்தோடு தொடர்பானது அதற்கும் நாக்கிற்கும் சம்பந்தம் கிடையாது. எனவே, ஒரு முஸ்லிம் ஸஹர் செய்துவிட்டு விஷேடமாக ஒரு மூலையில் போய் நின்று இந்த வார்த்தைகளை உச்சரிப்பதுதான் நிய்யத்தல்ல. யார் இரவில் எழும்பி, நாளை நோன்பு நோற்பதாக நினைத்து ஸஹர் செய்கின்றாரோ அவர் நிய்யத் வைத்தவராகவே கணிக்கப்படுவார்.

நோன்பை தொடராக நோற்றுவரும் ஒரு முஸ்லிம் நாளை நோன்பு பிடிப்பதாகவே நினைத்துக்கொண்டு தூங்குவாரானால் அவர் ஸஹ்ருக்கு எழும்பாவிட்டாலும் அவரும் நிய்யத் வைத்தவராகவே கருதப்படுவார். அவர் தாராளமாக தனது நோன்பைத் தொடரலாம்.

❖ நோன்பு கால இரவுகளில் மனைவியுடன் சேர்ந்த பின்பு நோன்பு நோற்க குளிக்க வேண்டுமே?

பதில்: குளிக்கவேண்டிய அவசியமில்லை. இதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாக அமைகின்றது. 'நபி (ஸல்) அவர்கள் குளிப்பு கடமையான நிலையில் (நோன்பு காலத்தில்) பஜ்ர் (சுபஹ்) நேரத்தை அடைவார்கள். பின்னர் குளித்துவிட்டு நோன்பைத் தொடருவார்கள்.

அறிவிப்பு : ஆயிஷா (ரழி), ஆதாரம் : புஹாரி

எனினும் சுபஹ் தொழுகையை அவர் நிறைவேற்ற வேண்டி இருப்பதால் அத்தொழுகைக்காக அவர் குளித்துக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நோன்பாளி அதிகமாகத் தூங்குவது நல்லதா?

பதில்: நல்லதல்ல. நோன்பின் நன்மைகள் குறையவும், உடலியல் ரீதியாக சோம்பலும், உற்சாகமின்மையும், பலவீனமும் ஏற்பட இது வழி வகுத்து விடக்கூடும். பொதுவாக ரமழான் மாதத்தை எமது சில சகோதரர்கள் 'தூங்கி வழியும்' மாதமாக ஆக்கிவிடுகின்றனர். ஆனால், எமது வரலாற்றைப் புரட்டிப்பார்ப்போமானால் முஸ்லிம்கள் தம்மை நோக்கி வந்த பாரிய சவால்களை முறியடித்து வெற்றியீட்டிய மிகவும் உற்சாகம் நிறைந்த வெற்றியின் மாதம் இது என்பதை அதன் பக்கங்களில் கண்டு கொள்ளலாம்.

இஸ்லாத்தின் முதல் வெற்றி ரமழான் பிறை 17இல் பத்ர் போர்க்களத்தில் ஈட்டப்பட்டது. இஸ்லாம் ஒரு சாம்ராஜ்ஜியத்தின் மார்க்கமாக ஆகுவதற்கான முதற்படி மக்கா வெற்றி மூலமே இடப்பட்டது. அது நிகழ்ந்ததும் ரமழான் மாதத்திலேயே ஐரோப்பாவின் மீது படையெடுத்தமை முஸ்லிம்கள் மூலம் உலக மறுமலர்ச்சி பெற வழியேற்படுத்தியது. இதுவும் புனித ரமழானிலேயே நிகழ்ந்தது. இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கூண்டோடு அழிப்பதற்காகவே மங்கோலியர் முஸ்லிம்கள் மீது படையெடுத்தனர். அவர்களை முறியடித்ததும் இந்த ரமழான் மாதத்திலேயே.... இவ்வாறு பல வெற்றிகள்.

ஆரம்பகால முஸ்லிம்கள் இவ்வெற்றிகளைப் பெற்றமைக்கான காரணம் ரமழான் மாதத்தில் அல்லாஹ்வை மிகநெருங்கியவர்களாக முஸ்லிம்கள் மாறுவதுதான். தங்கள் நோன்பு மூலமும் இரவிலும், பகலிலும் செய்யும் இபாதத்துக்கள் மூலமும் இம்மாதத்தில் அல்லாஹ்வின் உதவியையும் வெற்றியையும் இலகுவில் முஸ்லிம்கள் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதையே இவை உணர்த்துகின்றன. ஆனால், நாமோ ரமழானில் இரவுகளை வீண்விளையாட்டிலும், கும்மாளங்களிலும், பகற்பொழுதுகளை தூக்கத்திலும் கழிக்கிறோம். இந்நிலை நிச்சயமாக மாறவேண்டும்.

❖ வேண்டுமென்றே நோன்பை முறிப்பவர்களைப் பற்றி கூறுங்களேன்?

பதில்: வேண்டுமென்றே நோன்பை முறிக்கும் காரியங்களில் ஒன்றைச் செய்வதன் மூலம் நோன்பை முறிப்பதானது நோன்பை அவமானப்படுத்தியதாக அமைவதிலும் அது பாவமாகவும் அமைகின்றது. நோன்பு நோற்ற நிலையில் மேலும் அதனைத்தொடர முடியாத நிலையில் நோன்பை விடுவதில் குற்றமில்லை. ஆனால், அவ்வாறு இல்லாத போது அது குற்றமாக அமைகின்றது. இந்த இரண்டு நிலையிலும் நோன்பை விட்டவர் அதனை மீண்டும் 'கழா' ச் செய்து கொள்ள வேண்டும். மனைவியோடு உடலுறவு கொள்வதைத்தவிர நோன்பை முறிக்கும் மற்றக் காரியங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தாலேயே மேலுள்ளவாறு விட்ட நோன்பைக் கழாச் செய்தால் போதுமானது. ஆனால், நோன்பு நோற்ற நிலையில் மனைவியோடு தாம்பத்திய உறவு கொண்டு நோன்பை முறித்தாலோ; அவர் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும் அல்லது இரண்டும் மாதங்கள் தொடர்ந்தேர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும் அல்லது அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும். (ஹதீஸ் ஆதாரம் : ஸிஹாஹ் ஸித்தா கிரந்தங்கள் அனைத்தும்). அத்தோடு வேண்டுமென்று ரமழான் நோன்பை விட்டுவிடுபவர்கள் இந்த நபிமொழியையும் கவனத்தில் எடுப்பது நல்லது. அதாவது, "யார் ரமழான் நோன்பொன்றை அனுமதிக்கப்பட்ட எக்காரணமுமின்றி விட்டுவிடுகின்றாரோ அவர் காலம் முழுக்க நோன்பு நோற்றாலும் அதற்கு ஈடாகாது". (அபூதாவூத், இப்னு மாஜா, திர்மிதி)

❖ நோன்பை முறிக்கும் காரியங்கள் யாவை?

பதில்: 01. வேண்டுமென்றே சாப்பிடுதல் அல்லது குடித்தல்
02. முனைந்து வாந்தி எடுத்தல்.
03. ஹைழ் (மாதாந்த ருது) நிபாஸ் (பிள்ளைப்பேற்று இரத்தம்) ஏற்படல்.
04. இந்திரியத்தை வெளிப்படுத்தல். (தூக்கத்தில் தானாக வெளியேறினால் முறியாது).
05. உடலுறவில் ஈடுபடல்.
06. நோன்பு நோற்ற நிலையில் நோன்பை விட்டு விடுதாக உறுதியாக நினைத்தல்.

*- அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன் -*

## நீயும் நெருப்புத்தான் !

பொன்னைச்சுட்டெரித்துச்
சுடரவைக்கும் நெருப்பு !
என்னைச்சுட்டெரித்துச்
சுடர வைக்கும் நோன்பு !

சுட்டெரித்துச் சுடரவைக்கும்
நோன்பே.....!
நீயும் ஒரு வகையில்
நெருப்புதான்!

*- அஸீஸ். எம். பாயிஸ் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாத(ப்) புனித விடுமுறை

வானத்துப்பிறையும்
உன் வருகை கண்டு
முக்காடிட்டுக்கொண்ட
ஒரு நாள் !

மானிடத்தர் நடத்தையை
ஒரு மாதத்திற்கு
மறைத்தொழிக்க
வந்த பொன்நாள் !

வானொலிகள் வாய்க்கு
பூட்டிட்டு
தொலைக்காட்சி முகத்துக்கு
திரையிட்டு திருத்த வந்த
திருநாள் !

வெற்றிலைத்தட்டுடன்
சுற்றியிருந்து ஊர் பலாய்
உரசுவோருக்கு - ஒருமாத
விடுமுறை நாள் !

மனங்களைச் சுத்தப்படுத்தி
குடலைச் சுருட்டவைத்து
ஏழைப்பசியை உணரவைக்கும்
எளிமையான நாள் !

சுப்ஹ்த் தொழுகையை
கழாப் போட்டு
சுருட்டிப் போர்த்தி
குறட்டை விடுவோரை
துயில் எழுப்பவந்த
குயில் கூட்டத்தின் நாள் !

மொத்தத்தில்
இதயங்களில் துருவகற்றி
உதயம் ஒன்று காட்ட
உரிமையுடன் திறக்கப்பட்ட
சுவர்க்கலோக கதவாய்
அமையும் நாள் !

வளர்பிறை நஹ்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீறல்

மின்னல் வெளியீட்டக
கலை இலக்கியக்குழு.

**காலாண்டிதழ்**
நவம்பர் – ஜனவரி
2001 / 2002



பிரதம ஆசிரியர் :
அஸீஸ் எம் பாயிஸ்

உதவி ஆசிரியர்கள் :
ஐ. பி. எம். ஸாலிஹ்
எஸ்.எம்.எம். நஸீறுதீன்

அட்டை ஓவியம் :
ஐ. எல். றிஸ்வி

இதழ்வடிவமைப்பு
உள் ஓவியங்கள் :
பிரதம ஆசிரியர்

தொடர்புகளுக்கு :
**KEERAL**
Minnal Publication,
194, Weaving Centre Road,
Oluvil - 02.
Tel : 067 - 55157, Fax : 067 - 55157


## முரண்கள்

நோன்பு காலம்
உணவடங்குச் சட்டம் !
தேர்தல் காலம்
ஊரடங்குச் சட்டம் !

நோன்பு
மக்களைக்
கூட்டிணைக்கிறது !
தேர்தல்
மக்களின்
கூட்டுடைக்கிறது !

நோன்பு தருவது
இனிய சுவனலோகம் !
தேர்தல் தருவது
இருண்ட எதிர்காலம் !

□□ றிஸ்வி □□

### உங்கள் கவனத்திற்கு

கீறல் ஜனவரி இதழுக்காக இலக்கிய நெஞ்சங்களிடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். கவிதை, கட்டுரை (ஆய்வு/ அரசியல்).
சிறுகதைகள், நூல் விமர்சனங்கள், இப்படி இலக்கியம் சார்ந்தவைகள் மட்டுமல்ல வேறு எதுவானாலும் புதிய கோணத்தில் படைத்து அனுப்பி வையுங்கள்.

எதிலும் நவீனத்துவம் இழையோடட்டும் ஆக்கங்கள் தரம் கண்டு நிச்சயம் பிரசுரிக்கப்படும். இன்றே எழுதுங்கள்.

— பிரதம ஆசிரியர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் தொழுகையில் கழா ! ரீ.வி. யின் முன்னே விழா !

## கருத்துக்குவியல்

- கூட்டாகத் தொழுவது சில நூறுபேர்
  தனியாகத் தொழுவது பல்லாயிரம் பேர்

- இடைவெளி தெரிவது தொழுகையின் ஸ.்.ப்பில்
  இறுக்கமாய் இருப்பதோ மதுக்கடை மப்பில்

- பெண்களின் தொழுகை பாதி வளவில்
  ஆண்களின் கரம்போட் மீதி வளவில்.

- தினமும் தொழுகையில் கழா
  ரீ.வி.யின் முன்னே விழா.

- கழட்டாத தொப்பி தலையில்
  கசங்காத காட்ஸ் கையில்.

- உயரத்தில் இருக்கவேண்டியதோ குர்ஆன்
  உயரந்திருப்பதுவோ ரீ.வி. அன்ரனா.

- பள்ளியைச் சுற்றி பத்தாயிரம் விசுவாசிகள்
  உள்ளே தொழுகைக்கு ஒரு ஸ.்.ப்பில் மக்கள்.

*கருத்தாக்கம் : அபூஸறபாத்*

## மரைக்கார் மான்மியம்

அச்சிக்காக்கா பள்ளி மரைக்கார்
அனைவருக்கும் ஸலாம்கள் உரைக்கார்
கச்சிதமாய் ஆற்றுகிறார்
காரியங்கள் ஊர் கெடுக்கும்
பச்சைப் பொய்யும் கட்டி இறைக்கார்.

*— யாஸீன் ஸாலிஹ் —*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களைச் சுட்டெரி



ரமழானே !
உன் பெயர் சுட்டெரித்தலாமே ?
இவர்களைச் சுட்டெரி !


நீ வந்த பிறகும்
தெருக்களில் தேனீர் வைப்போர்

மழை வந்தும்
தாகம் தீர்க்காதவனாய்
நீ வாசல் வந்தும்
உனை ஏற்காதோர்

பகலில் பசித்திருந்தமைக்காய்
இரவில் பழிவாங்குவோர்

ரமழானே !
உன் காலத்தில்
ஒன்றுக்கு இரட்டைக்
கூலியாமே .....?
எனின்
என் கவியும்
கனக்குமா?

[illegible]



## அழைப்பு

ரமழான் நம்
தலைவாசலுக்கு
வந்து விட்டது....
எங்கள் இதயக்
கதவுகள்தான்
இன்னும் திறந்து
கொள்ளவில்லை !

வாருங்கள்
நோன்பைச் சாப்பிடுவோம்
நம்
பாசி படிந்த மனங்களுக்கு
பாவ மன்னிப்புக்கோரி
தூசு தட்டி
துப்பரவாக்கிக்
கொள்வோம் !

அபூ ஸஹ்ரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அணுகுமுறை, புதிய வியாபாரம், நியாய விலை, 25 வருட சேவை அனுபவம், தரத்தில் உயர்ந்த பொருட்கள்.
உங்களையும் அழைக்கிறது.

## நியூ ஜனதா டெக்ஸ்

பழைய தபாலக வீதி, ஒலுவில் - 02. தொ.பே. 067 - 55020
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களும், குறைந்த கட்டணத்தில்.
உரிமையாளர் : எஸ். எல். ஆதம்லெவ்வை

சிறந்த சிற்றுண்டி வகைகள், மற்றும் சுவைமிகு தேனீர் - இவற்றுக்கு

## ஹபீஸ் ஹோட்டல்

143, தேத்தாவடி வீதி, ஒலுவில் - 06.
உரிமையாளர் : எம். எச். எம். ஹாரீஸ்

ஆடம்பரப் பொருட்களின் பூங்கா

## ஸபானா ஷொப்பிங் சென்டர்

02, ஆசாத் பில்டிங், அக்கரைப்பற்று
சிறந்ததரம் - நியாயவிலை

மொத்த சில்லறை வியாபாரத் துறையில் என்றும் முன்னணியில்

## எஸ். ரீ. எம். நஸ்றுல்லாஹ் ஸ்டோர்

பொத்துவில் வீதி, அக்கரைப்பற்று.

சுவைமிகு சிற்றுண்டி தேவையா? மலையக தேயிலையில் தேனீர் பருக ஆசையா?
உங்கள் சுவைக்கு நினைவில் நிற்கட்டும்

## ஜனான் ஹோட்டல்

ஹாஸீம் வீதி, 4ம் சந்தி, ஒலுவில் – 02.
உரிமையாளர் : ஐ. எல். ஜனான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தம், தரம் இவற்றில் என்றென்றும் முதலிடம்

ஹாஜா குரக்கள் & சிறந்த தேயிலை வகை

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

எம். எச். பழீல் அஹமட்

பிரதான வீதி, ஒலுவில்.

தொ.பே. 067 - 29836

பேக்கரி பொருள் உற்பத்தியில் புதிய அணுகுமுறை, புதிய தரம் - சுவை

குவாலிட்டி பேக்கரி

தேத்தாவடி வீதி. ஒலுவில் – 06.

விஷேட ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நியாயமான விலையில் கட்டிட நிர்மாண, வீட்டுத்தேவைகளுக்கான இரும்புப் பொருட்கள், மின்சார இணைப்பு உபகரணப் பொருட்கள் என்பவற்றை

இப்பொழுது ஒலுவிலில் சந்தைப்படுத்துகிறார்கள்

றிஸ்கி ஹார்ட்வெயார் & எலக்ரிகல்ஸ்

பிரதான வீதி, ஒலுவில்

உரிமையாளர் : ஏ. எம். அஷ்ரஃப்

அன்றாட சமையலறைப் பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் தினசரி பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற

ஹோம் நீட்ஸ் & சந்தோச முகவர்

பழைய தபாலக வீதி, ஒலுவில் – 02.

தொ. பே. 067 – 55076. உரிமையாளர் : எம். எல். எம். ஹனீபா (மேசா)

நியாயமான விலையிலான சிறந்த ஆடைத்தெரிவுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

ஒலுவில் டெக்ஸ்

பழைய தபாலக வீதி, ஒலுவில் - 02.

உரிமையாளர்கள் : ஐ. எல். அபூபக்கர், ஏ.எல். ஹாஸீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org